பதுளை பிரதேசசபை
பதுளை மாவட்டம்
-----------------------------

1. <u>நிதிக்கூற்று</u>

1.1 <u>நிதிக்கூற்று சமர்ப்பித்தல்</u>

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்று 2019 மார்ச்சு 08 ஆம் திகதி கணக்காய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு ஆதிபதியின் அறிக்கை 2019-05-30 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதி தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 <u>நிலைகள் தொடர்பில் கணக்கிடு செய்யப்பட்ட அபிப்ராயம்</u>

இந்த அறிக்கையில் நிலையை விளக்கிய அபிப்ராயம் தொடர்பாக விபரத்தை தரும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலுள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பதுளை பிரதேசசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் ஆண்டிற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கமைவாகவும், உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை பிரதிபலித்து நிற்கின்றது என்பதே எனது அபிப்ராயமாகும

1.3 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கிட்டு ரிதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (i) | மிளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் முத்திரைக்கட்டணத்திறகாக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூ.6,000,000 ஆகவிருப்பினும் கணக்கில் ரூ.18,000,000 ஆக பொருத்தப்பாட்டை செய்துள்ளதன் காரணமாக வருடத்தின் வருமானம் மற்றும் அசையும் ஆதனங்கள் ரூ.12,000,000 ஆக கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்கினை சரிசெய்ய வேண்டியுள்ளது. | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய நிதிமன்ற தண்டப்பணம் ரூ.7,726,225 இருப்பினும் அதனை கணக்கில் ரூ.8,000,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | கணக்கினை சரிசெய்ய வேண்டியுள்ளது. | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூ.358,854 கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. | கணக்கினை சரிசெய்ய வேண்டியுள்ளது. | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | கடந்தாண்டில் பொருட்கணக்கெடுப்பின் பரிந்துரையின் அடிப்படையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூ.85,900 பெறுமதியான பொருட்கள் ஆதனங்கள் கணக்கிடப்படவில்லை. | கணக்கினை சரிசெய்ய வேண்டியுள்ளது. | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். . |

1.4 சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் முகாமைத்துவ திர்மானங்களுக்கும் அமைவாக இல்லாமை

| சட்ட திட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் முகாமைத்துவத்தின் தீர்மானங்களுக்குமான சமர்ப்பிப்பு | அமைவாக இல்லாமை | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| ---------------------- | ------------------------------ | --------------- | ------------------- |
| (அ) 1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைசட்டம் | | | |
| (ை) 127 பிரிவு | 25 பொதுமயானங்களுக்கான நிலங்கள் அளவிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்படவில்லை. | சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச செயலாளரின் மூலமாக நில அளவையாளர் திணைக்களத்துக்கு அளவிடல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டதுடன் அளவிடலின் பின்னர் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ை)153(1) (அ(, ) ஆ(, )இ( பிரிவு மற்றும் 2016 டிசம்பர் 09 திகதிய 1997 கொண்ட வர்த்தமானி | சுபை அதிகார பிரதேசத்திற்குள் அபிவிருத்தி செய்யாத காணிகளுக்காக காணியின் அசல் பெறுமதியின் நூற்றுக்கு 2 விகித வரி 2017 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவதற்கு உபவிதிகள் விதிக்கப்பட்டிருப்பினும் அபிவிருத்தி செய்யாத காணிகளை இனங்கண்டு வரி அறவிடுவதற்கு 2018 அக்டோபர் 31 ஆம் திகதி ஆகும் போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | வருங்காலத்தில் கணக்கெடுப்பொன்றி செய்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) உள்ளுராட்சி ஆணையாளரது 1980 ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி இல. 1980/ 46கொண்ட சுற்றறிக்கை. | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை சபை கடைவாடகையை மதிப்பிட வேண்டுமெனினும் சபைக்கு சொந்தமான 02 கனுவ பொது வர்த்தக கட்டிடத்தொகுதியில் உள்ள 19 கடையறைகள் 2012 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பிடப்படாமல் வெளியாருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. | | 2019 வருடத்தில் மதிப்பிட செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மிளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

முன்வைக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கமைய மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காக சபையின் மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.14,964,244 ஆவதுடன் அதையொத்து பார்க்கையில் கடந்த வருடத்தில் மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.4,343,789 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காகவும் கடந்த வருடத்திறகுமாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம | புட்டியலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 இற்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | புட்டியலிடப் பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 இற்கு மொத்த நிலுவை |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (i) | சோலை வரியும் வரியும் | 1,011,972 | 963,704 | 634,829 | 377,143 | 995,047 | 992,070 | 704,992 | 287,078 |
| (ii) | வுாடகை | 557,200 | 516,000 | 505,725 | 551,475 | 540,523 | 540,523 | 514,303 | 26,220 |
| (iii) | அனுமதிப்பத்திரகட்டணம் | 355,000 | 350,000 | 758,480 | 0 | 284,000 | 284,000 | 517,417 | 0 |
| (iv) | பிற வருமானம் | 510,000 | 510,000 | 412,319 | 97,681 | 660,000 | 506,106 | 378,805 | 127,302 |
| | மொத்தம் | 2,434,172 | 2,339,704 | 2,311,353 | 1,026,299 | 2,479,570 | 2,322,699 | 2,115,517 | 440,600 |

#### 2.2.2 வருவாய் சேகரிப்பு தொடர்பான செயலாக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.2,339,704 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டு நிறைவெய்துகையில் ரூ.1,026,299 தொகை அறவிடப்படாததுடன் அது மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 44 விகிதமாகும். | நிலுவை வருவாய் அறவிடப்பட வேண்டும். | ஆதன நடுக்கட்டலின் மூலமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஓராண்டிற்கும் அதிகமான காலம் தொடக்கம் இருந்து வரும் கிடைக்க வேண்டிய நிலுவை சோலைவரி நிலுவை மூலதன நன்கொடை நிலுவை கடையறை வாடகை நிலுவை கழிவு வரி நிலுவை தண்ணி இணைப்பு கட்டணம் மற்றும் நிலுவை தண்ணி கட்டணம் ஆகியவற்றின் மொத்த தொகை ரூ.2,766,891 தொகை மிளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | ஆறவிட முடியாத கடையறை வாடகையை நிக்குவதற்கும் பிற கட்டணங்களை அறவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

2.2.3 நிதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக்கட்டணமும்

(அ) நிதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மிளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய நிதிமன்ற தண்டப்பணம் ரூ ரூ.8,000,000 அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவை நிதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். . | புணம் கிடைக்காத மாதங்களுக்கான உபஅட்டவனைகள் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. |

(ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மிளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறிவட வேண்டிய நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.18,000,000 அறவிடப்படவில்லை. | நிலுவை முத்திரைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | புணம் கிடைக்காத மாதங்களுக்கான உபஅட்டவனைகள் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மிளாய்வு

3.1 செயலாக்கம்

பிரதேசசபை கட்டளைச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கிழ் பொதுமக்கள் சுகாதாரம் பொதுபயனபாட்டு சேவைகள் மற்றும் பொதுப்பாதைகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் மக்களது வசதிமிகு பயன்பாடு வசதி மற்றும் நலன்புரிசேவை ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கருமங்கள் தொடர்பாக அறியவந்துள்ள விடயங்கள் பின்வருமாறு

(அ) செயல்திட்டமிடல் வரைபு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மிளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக செயல்திட்டமிடல் வரைபொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்திட்டமிடல் வரைபொன்று தயரித்து அதன்படி செயலாற்ற வேண்டும். | 2019 வருடத்தில் திட்டமிடல் அறிக்கயை தயார் செய்ய நடவடிக்கையெடுப்பேன். 2019 |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | விதந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவிடு செய்யும் | வருங்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் |

| | | |
|---|---|---|
| சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மேற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுகொள்ளும் குறிக்காட்டிகளை இனங்கண்டிருக்கவில்லைஸஹாவ | குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | நோக்கத்திற்கிணங்க செயலாற்ற எதிர்ப்பார்க்கப்படுவதாக, |

3.2 முகாமைத்துவம் சார் விணைத்திறன் அற்றதன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | விதந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| | ---------------------------------------------------------------------- | --------------------------- | --------------------------- |
| (அ) | சபைக்கு சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரம் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 மற்றும் 19 ஆம் ஆகிய இரு தினங்களுக்குள் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் தோட்டம் சார் இல்ல நிர்மாணிப்பு வேலைத்திட்டத்திற்காக இயந்திர சாதன மணித்தியாலயம் 10.7 சேவையில் ஈடுபடுத்துவதற்காக அறவிட வேண்டியிருந்த ரூ.24,610 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகை அறவிட வேண்டும். | இத்தொகை அறவிட்டுக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | ஓராண்டிற்கு அதிக காலமாக இருந்து வரும் செலுத்த வேண்டிய செலவு கடன்கொடுத்தோர் மற்றும் வேலை சம்பந்தப்பட்ட கடன்கொடுத்துதொர் மிகுதிகளின் மொத்தம் ரூ.4,154,791 தொகை மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திலும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மிகுதி தொகை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடப்பாண்டில் செலுத்த வேண்டிய தொகை மிகுதி சரிஅசய்ய நடவடிக்கை எடுப்பேன். . |

3.3 (ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்
-----------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| | ----------------------------------- | ---------------------------- | ---------------------- |
| (அ) | 30 ஆண்டுகாலமாக பதுளை பிரதேசசபையினால் வேவஸ்ஸ தோட்டத்திற்கு சொந்தமான காணித்துண்டுக்கு கழிவு அகற்றப்பட்டாலும் இந்த காணித்துண்டு 2018 ஆம் ஆண்டு 31 ஆம் திகதி வரை சபைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரித்தான காணியை விடுவித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருங்காலத்தில் சரியான செயற்பாடுகுளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | திண்மக்கழிவு தொடர்பாக உபவிதிகள் 22 (ஒ) பந்திக்கமைய வம் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரமொன்றை | சட்ட விதிகளுக்கமைய அனுமதிப்பத்திரமொன்று அல்லது சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். | வருங்காலத்தில் சரியான நடவடிக்கையெடுக்க செயலாற்றுவேன். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கு பிரதேசசபை செயலாற்றியிருக்கவில்லை. | | |
| (இ) | உக்கலடையும் கழிவுகளை மிள்சுற்சி செய்து அவற்றை பிரயோசனமிக்க காரியத்துக்கு பயன்படுத்துவது தொடர்பாக கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டம் பிரதேசசபையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உக்கலடையும் கழிவுகளை பயனுடைய காரியத்துக்கு பயன்படுத்த வேண்டும். | வருங்காலத்தில் சரியான நடவடிக்கையெடுக்க செயலாற்றுவேன |

3.4 கொள்வனவு

கொள்வனவு திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------------- | ------------------------------ | --------------------------- |
| மிளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக கொள்வனவு திட்டமொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு திட்டமொன்று தயார் செய்யப்பட வேண்டும். | 2019 வருடத்திற்காக கொள்வனவு திட்டம் தயார்செய்யப்பட்டு கொண்டிருக்கின்றது. |

4. கணக்கு செயற்பாடு மற்றும் நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| -------------------------------------- | ------------------ | -------------------------- |
| மிளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | வருங்காலத்தில் உள்ளக கணக்காய்வு செய்ய நடவடிக்கையெடுப்பேன். |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------------- | ------------------------------- | ----------------------- |
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 ேன் 09 திகதிய இல.டி.எம்ஏ 2009 (01) திகொண்ட சுற்றுநிருபத்துக்கமைய காலாண்டுக்கொரு முறையாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்து கமிட்டி நடாத்த வேண்டுமெனினும் மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டங்கள் 02 மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | வருங்காலத்தில் காலாண்டுக்கொண்று விதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |